Indl. copy

<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – திரு.வி.மகேஷ் – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2) துறை</u>

**அரசாணை (3ப) எண்.49** **நாள் 28.12.2020**
**சார்வரி, மார்கழி–13**
**திருவள்ளுவர்ஆண்டு–2051.**

**படிக்கப்பட்டது**

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018
2. பதிவுத்துறைத் தலைவரின் நடவடிக்கைகள் எண்.43559/கே2/2018, நாள் 22.01.2020.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
4. பதிவுத்துறைத் தலைவரின் கடிதம் எண்.19206/கே2/2019, நாள் 16.11.2020.

******

<u>**ஆணை:-**</u>

பதிவுத்துறையில், கன்னியாகுமரி பதிவு மாவட்டம், பூதப்பாண்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்தபோது, பணிக்காலத்தினிடையே 22.01.2019 அன்று காலமான திரு.கு.விஜயேந்திரன் என்பவரின் மனைவி திருமதி.R.ராணி தனது மகன் திரு.வி.மகேஷ் என்பவருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 02.04.2019–ல் மனு அளித்தார். நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி, அன்னாரது கோரிக்கையினைப் பரிசீலனை செய்த பதிவுத்துறைத்தலைவர், திரு.வி.மகேஷ் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், அவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கியுள்ளார். அதன்படி, திரு.வி.மகேஷ், 29.01.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திரு.வி.மகேஷ், இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப் படுத்துவதற்கு பதிவுத்துறைத் தலைவர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், பதிவுத்துறைத்தலைவரின் செயற்குறிப்பு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பதிவுத்துறையில், மார்த்தாண்டம் பதிவு மாவட்டத்தில், பார்வை மூன்றில் காணும் உள்ள அரசாணையின்படி கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.வி.மகேஷ் என்பவருக்கு 29.01.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணிவரன் முறைப்படுத்துவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் பெறத் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.21017/ட்டி1/2020, நாள் 21.12.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.35054/ஜி1/2020, நாள் 23.12.2020–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பீலா ராஜேஷ்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பதிவுத்துறைத் தலைவர், சென்னை–28.
✓திரு.வி.மகேஷ், இளநிலை உதவியாளர்,
மார்த்தாண்டம் பதிவு மாவட்டம். (பதிவுத்துறைத் தலைவர் மூலமாக)

**நகல்:**
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு(ட்டி1)த்துறை, சென்னை–9.
பணியாளர் (ம) நிருவாக சீர்திருத்த(ஜி1)த்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

தி.ஜோமா ராணி
பிரிவு அலுவலர் 24/12/20

Indwl.copy

/பதிவஞ்சலில் /ஒப்புகை அட்டையுடன்/

பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
சென்னை-600 028.

<u>மே.எ.எண்.19206/கே2/2019-1 நாள்.11.01.2021.</u>

அரசாணை (3ப) எண்.49, வணிகவரி மற்றும் பதிவு(எம்2)த்துறை, நாள்.28.12.2020 சார்பு செய்யப்படுகிறது.

திரு.வி.மகேஷ், இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் குறிப்புகளை மேற்கொள்ள மார்த்தாண்டம் மாவட்ட பதிவாளர் கோரப்படுகிறார்.

இத்துடன் தனியரது அசல் சான்றுகள் அனுப்பி வைக்கப்படுகிறது. அவற்றினை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப மார்த்தாண்டம் மாவட்ட பதிவாளர் கோரப்படுகிறார்.

12/1/2021

பதிவுத்துறை தலைவரின்
நேர்முக உதவியாளர் (பொது)

11/01

பெறுநர்
திரு.வி.மகேஷ், இளநிலை உதவியாளர்.
(மார்த்தாண்டம் மாவட்ட பதிவாளர் மூலம்)

<u>நகல்:</u>
1.மாவட்ட பதிவாளர், மார்த்தாண்டம்.
(அசல் S.S.L.C. மதிப்பெண் சான்றுடன் -
பதிவு எண்.020777/மார்ச் 2008)
2.கே1 இருக்கையாளர், பதிவுத்துறை தலைவர் அலுவலகம்
3.முக்கிய ஆணைக் கோப்பு/ தனி நகல் -1